பக்கங்கள் 23+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 13 வியாழக்கிழமை 27.03.2025 | அதிர்வு 236

## இந்திய மீனவர்கள் 11 பேர் இன்று அதிகாலை கைது!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் 11 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

02▶

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இலஞ்ச, ஊழல் குற்றச்சாட்டில் கைதான சாமர சம்பத் எம்.பி.

## பிணையில் விடுவிப்பு; வெளிநாடு செல்லத் தடை



இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் இன்று கைது செய்யப்பட்ட புதிய ஜன நாயக முன்னணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஊவா மாகாண முதலமைச்சராக அவர் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்ற 3 ஊழல் கொடுக்கல் - வாங்கல்கள் தொடர்பில் இன்று காலை

02▶

## ஏப்ரல் 22, 23, 24 இல் தபால் மூல வாக்களிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 22, 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்னாயக்க கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

02▶


## மன்னாரைச் சேர்ந்த குடும்பஸ்தர் மாயம்

### மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார், பனங்கட்டு கொட்டு மேற்கு பகுதியைச் சேர்ந்த முருகேசு சசிக்குமார் என்ற 51 வயது குடும்பஸ்தர், கடந்த 23 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளளார் என்று அவரது மனைவி மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி குடும்பஸ்தர் கடந்த 23 ஆம் திகதி வவுனியா சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவர் காணாமல்போயுள்ளார் என்று அவரது மனைவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.



இந்த நபர் தொடர்பாக தகவல் எதுவும் தெரிந்தவர்கள் 0743022280, 0758320499 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறியத் தருமாறு குடும்பத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட குடும்பப் பெண் மரணம்!

அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, சேற்றுக்குடா பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயே தனது நோய்க்கான மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டதால் மரணமடைந்துள்ளார்.

வழமை போன்று நேற்று புதன் கிழமை இரவு உணவு உட்கொண்டு விட்டு நோய்கான மாத்திரைகளையும் உட்கொண்டு மேற்படி பெண் உறங்கச் சென்றுள்ளார். இன்று வியாழக்கிழமை அதிகாலை தனது மனைவிக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டதை அவதானித்த கணவர், மனைவியை உடனே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றார்.

அந்தப் பெண்ணுக்கு அங்கு சிகிச்சையளிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைய, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்பவ இடத்துக்குச் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டு, சடலத்தைப் பிரேத பரிசோதனைக்குப் பணித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஏப்ரல்...

குறித்த திகதிகளில் வாக்களிக்க முடியாதவர்கள் ஏப்ரல் மாதம் 28 மற்றும் 29 ஆம் திகதிகளில் வாக்களிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான தேர்தலும் மே மாதம் 6 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

குறித்த மூன்று பிரதேச சபை தேர்தலுக்கான வேட்புமனு கையளிப்பு இன்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்துள்ளது.

### இந்திய மீனவர்கள்...

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகை மடக்கிப் பிடித்த கடற்படையினர், அதிலிருந்த 11 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்கள் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

### இலஞ்ச...

விசாரணை நடத்தப்பட்ட நிலையில் அவர் கைது செய்யப்பட்டார்.

இரண்டு அரச வங்கிகளிடமிருந்து இரண்டரை மில்லியன் ரூபா பணத்தை ஊவா மாகாண சபைக்காகப் பெற்றுக்கொண்டு அதனை சாமர சம்பத் தசநாயக்க அறக்கட்டளை வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டமை இந்தக் குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும்.

மற்றுமொரு அரச வங்கியிடமிருந்து மாகாண சபைக்காக பெற்றுக்கொண்ட ஒரு மில்லியன் ரூபா பணத்தை முதலமைச்சராக வங்கிக்கிளையிலிருந்து நேரடியாக அவர் பெற்றுக்கொண்டமை இரண்டாவது குற்றச்சாட்டாகும்.

மற்றுமொரு அரச வங்கியிடமிருந்து பணத்தைக் கோரிய போதிலும் அதனை முகாமையாளர் நிராகரித்ததன் பின்னர் மாகாண சபை நடத்திச் சென்ற அனைத்து நிலையான வைப்புகளையும் அந்த வங்கியிலிருந்து மீளப்பெற்றுக்கொண்டமையால் 23 மில்லியன் ரூபா அரசுக்கு நட்டத்தை ஏற்படுத்தியமை மூன்றாவது குற்றச்சாட்டாகும்.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சாமர சம்பத் தசநாயக்க இன்று காலை 9.30 மணிக்கு இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்குச் சென்றிருந்த நிலையில் அங்கு கைது செய்யப்பட்டார்.

அவர் இன்று பிற்பகல் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டார்.

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 5 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார்.

வெளிநாட்டுக்குச் செல்ல அவருக்குத் தடை விதிக்கப்பட்டதுடன் அவரது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும் கொழும்பு பிரதான நீததிவான் தனுஜா லக்மாலி உத்தரவிட்டார்.

# ஒரு தொகை கேரள கஞ்சா பொலிகண்டியில் சிக்கியது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதியில் இன்று காலை ஒரு தொகை கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இராணுவப் புலனாய்வுக்குப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது பொலிகண்டி பகுதியில் பழைய வீடொன்றுக்குள் மறைத்து வைக்கப்படிருந்த நிலையில் குறித்த கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப்படவில்லை.

75 கிலோகிராமுக்கும் அதிகமான இந்தக்கஞ்சாவல்வெட்டித்துறைபொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மேலதிகவிசாரணைகளைவல்வெட்டித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# பல்கலைக்கழக விஞ்ஞானப் பிரிவு ஊழியர்களுக்கு ஈச்சம் பழங்கள்!



(அபு அலா )

தென்கிழக்கு பல்கலைக்கழக சம்மாந்துறை வளாக விஞ்ஞானப் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு நாபீர் பௌண்டேஷனால் இன்று (27) ஈச்சம் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

நாபீர் பௌண்டேஷனின் தலைவர், பொறியியலாளர் உதுமான்கண்டு நாபீரின் புதல்வர் நஸீம் ஆரிப் மற்றும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி எம்.எல்.துல்கர் நயீம், சம்மாந்துறை பிரதேச வீரமுனை வட்டார வேட்பாளர் உள்ளிட்ட பலர் பங்கேற்று ஈச்சம் பழங்களை வழங்கி வைத்தனர்.

புனித ரமழான் மாத காலங்களில் குறித்த பௌண்டேஷனால் வருடந்தோறும் இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறமை குறிப்பிடத்தக்கது.






# முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கூட்டுறவுத் துறை பிரதி அமைச்சரும் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க தலைமையில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று புதன் கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், முல்லைத் தீவு மாவட்ட செயலர் அ.உமாமகேஸ்வரன் மற்றும் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டார்.

கூட்டத்தில் தலைமையுரையாற்றிய பிரதி அமைச்சர், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அதிகளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டங்களை உரிய காலப்பகுதிக்குள் நிறைவு செய்யுமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைத்தார்.

கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராயப்பட்டு தீர்க்கப்பட்ட பிரச்சினைகள், தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்ற பிரச்சினைகள் நேற்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

வீதிகள் தொடர்பான விடயங்களும், கனிய மணல் அகழ்வு தொடர்பான விவகாரங்களும், போக்குவரத்துத் தொடர்பான பிரச்சினைகளும் கூடுதலாக இதன்போது ஆராயப்பட்டன.

மேலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான கடைகளின் வைப்புப் பணத் தொகை அதிகமாகவுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டபோது அதற்குப் பதிலளித்த ஆளுநர், மக்களுக்கு சேவை செய்வதற்காகவே பிரதேச சபைகள் உள்ளன என்றும், அதிகளவு தொகையை அறவிடுவது பொருத்தமற்றது எனவும் குறிப்பிட்டார். அத்துடன் இது தொடர்பில் பல தடவைகள் தான் தெரிவித்துள்ளதாகவும், இவ்வாறு பெற்றுக்கொள்ளும் பணத்தில் மக்களுக்கு அபிவிருத்தியும் செய்வதில்லை எனவும், சபைகளின் நிரந்த வைப்பிலே இடப்படுகின்றன என்றும் ஆளுநர் விசனம் வெளியிட்டார்.

இதன் பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள், நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் திட்டங்கள், அனுமதி பெறவேண்டிய திட்டங்கள் என்பன சமர்ப்பிக்கப்பட்டன.

அனைத்துக்கும் உரிய அனுமதிகள் ஒருங்கிணைப்புக் குழுவால் வழங்கப்பட்டது.

விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் இறுதியாக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

சட்டவிரோதமாக கசிப்பு காய்ச்சும் நடவடிக்கை முல்லைத்தீவு மாவட்டத்தில் பரவலாக முன்னெடுக்கப்படுவதாகவும், 239 பேரை இதுவரை அடையாளம் கண்டுள்ளதாகவும் மாவட்ட செயலர் ஒருங்கிணைப்புக் குழுவின் கவனத்துக்கு கொண்டு வந்தார். பொலிஸாரின் ஒத்துழைப்பை அவர் கோரினார்.

நேற்றைய கூட்டத்தில் வட்டுவாகல் பாலம் எவ்வாறு திருத்தப்படவுள்ளது என்பது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையால் விளக்கமளிக்கப்பட்டது. மேலும், மாவட்டத்தில் நிலவும் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டதுடன், கடற்றொழில் தொடர்பில் தனியான கலந்துரையாடல் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜெகதீஸ்வரன், திலகநாதன், செல்வம் அடைக்கலநாதன், சத்தியலிங்கம், ரவிகரன், காதர் மஸ்தான் ஆகியோரும், வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலர்கள், திணைக்களத் தலைவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தென்னக்கோனின் நிலைமை

பொலிஸ்மா அதிபர் பதவியில் இருக்கும் தேசபந்து தென்னக்கோன் இப்போது உயர் நீதிமன்ற உத்தரவின் பேரில் பணி இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளார்.

அவரை சேவையில் இருந்து முற்றாக நீக்கும் விதத்தில் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. இது தொடர்பில் வாசகர் மத்தியில் ஒரு மயக்கமான - குழப்பமான - நிலைமை உண்டு.

முக்கிய பதவிகளுக்கு உரியவர்களை நியமிக்கும் தற்றுணிவு அதிகாரம் தனித்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் முன்னர் இருந்தது. அதை மாற்றியமைக்கும் ஏற்பாடுகள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பதவியிலிருந்து போது அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்டது. அப்போது சட்டமா அதிபர் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகிய பதவிகளை வகிப்போரை அவர்கள் குற்றமிழைத்தால் - அல்லது அப்பதவியில் தொடர்வதற்கு தகுதியில்லாத நடவடிக்கைகளில் ஈடுபட்டால் - நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் பதவியில் இருந்து அகற்றக் கூடியதான ஒரு சட்டமும் கொண்டு வரப்பட்டது. 'அதிகாரிகளைப் பதவி நீக்கும் (நடைமுறைகள்) சட்டம்' என்று பெயரிடப்பட்ட 2002 ஆம் ஆண்டின் ஐந்தாம் இலக்கச் சட்டம் இது பற்றி விவரிக்கின்றது.

மூன்றில் ஒரு பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பம் மூலம் மேற்படி இரு பதவிகளை வகிப்போருக்கு எதிராக விசாரணை ஒன்று நாடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட முடியும். அப்படி குறித்த எண்ணிக்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒப்பங்களோடு சமர்ப்பிக்கப்படும் பிரேரணை நாடாளுமன்றத்தில் உள்ள எம்.பிக்களில் அரைவாசிக்கும் கூடியோரின் ஆதரவோடு நிறைவேற்றப் படுமாயின், அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரிக்க மூவர் கொண்ட விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படும்.

அந்த மூவரில் ஒருவர் உயர்நீதிமன்ற நீதியரசராக இருக்க வேண்டும். அவரைப் பிரதம நீதியரசர் நியமிப்பார். அடுத்தவர் சுதந்திர பொலிஸ் ஆணைக் குழுவின் தலைவர். மூன்றாவது விசாரணையாளரை பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் இணக்கத்துடன் சபாநாயகர் நியமிப்பார். அவர் இந்த விசாரணைத் துறையில் விற்பன்னராக இருக்க வேண்டும்.

இந்த மூவர் அணியின் விசாரணை முடிவின் அடிப்படையில் நாடாளுமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் பொலிஸ்மா அதிபரை அல்லது சட்டமா அதிபரை பதவி நீக்க முடியும் என்று மேற்படி 2002 இன் 5ஆம் இலக்க அதிகாரிகளை பதவி நீக்கும் (நடைமுறைகள்) சட்டம் கூறுகிறது.

ஆயினும் இந்த விசாரணை முறைகள், நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்து இந்தப் பதவி நீக்க செயற்பாடு நடைமுறைக்கு வருவதற்கு காலம் எடுக்கக் கூடும். அதுவரையில் விவகாரம் இழுபடும்.

பொலிஸ்மா அதிபர் தேசபந்து சென்னக்கோனுக்கு எதிராக விசாரணை நடத்துவதற்கான காரணங்கள் - குற்றச்சாட்டுக்கள் - தாராளமாக இருக்கின்றன. அவற்றின் அடிப்படையில் தமது பதவியை தேசபந்து தென்னக்கோன் பறி கொடுப்பதற்கான வாய்ப்புகளும் தாராளமாகவே தெரிகின்றன.

இந்த வகையில் அவர் பதவியிழப்பாராயின் தமது சேவைக்குப் பிந்திய அரச கொடுப்பனவுகள், ஓய்வூதியம் மற்றும் பிற வசதிகளையும் அவர் இழக்க வேண்டி நேரும்.

உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்






# வவுனியாவில் தமிழரசின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு

**(கி.வசந்தன்)**

வவுனியாவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு இன்று நடைபெற்றது.

வவுனியா நகரில் அமைந்துள்ள வாடி வீட்டில் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ப.சத்தியலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, செட்டிகுளம் பிரதேச சபை என்பவற்றுக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர்.

இதில் கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வேட்பாளர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# புலம்புவதையும், சிணுங்குவதையும் விடுத்து பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வையுங்கள்!

## நுவரெலியா கூட்டத்தில் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு






தேசபந்து தென்னகோனை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பிலான பிரேரணையொன்று சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட போதிலும், முதலில் அவருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியே நடவடிக்கை எடுத்தது.

கடந்த அரச காலப் பிரிவில் முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் சபாநாயகரும் அரசியலமைப்பை மீறி, அரசியலமைப்பு பேரவையின் பணிகளை குறைமதிப்புக்கு உட்படுத்தி தேசபந்து தென்னகோனை நியமிக்க முற்பட்ட போது, ஐக்கிய மக்கள் சக்தியே அதனை எதிர்த்தது. அப்போது நானும் கபீர் ஹாசிமும் அவருக்கு எதிராக வாக்களித்தோம்.

இப்போது அவரை எதிர்க்கும் ஆளுந்தரப்பினர் எதிர்க்கட்சியில் இருந்த போது இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மௌனம் காத்து வந்தனர்.

தேசபந்து தென்னகோனின் நியமனம் தொடர்பில் அரசியலமைப்பை மீறியமைக்கு முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் சபாநாயகரும் பொறுப்புக் கூற வேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தி கொண்டு வந்த கொள்கையை இன்றைய அரசு கடைப்பிடிப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு முழு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி உறுதி பூண்டுள்ளது.

தோட்ட மக்களை லயன் அறையிலிருந்து விடுவித்து, அவர்களை சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்களாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து அவர்களை வலுவூட்டுவோம் என ஐக்கிய மக்கள் சக்தி தொடர்ச்சியாக கூறி வந்தது.

வேலையற்ற இளைஞர்கள் மற்றும் லயன் அறைகளில் வசிக்கும் மக்களுக்கு பயிரிடப்படாத காணிகளை வழங்கி, சொந்தக் காலில் நிற்கத் தேவையான திட்டங்களை நாம் வகுத்திருந்தோம்.

தற்போதைய ஆளுந்தரப்பினர் எடுத்த நடவடிக்கைகள் என்ன ? தேர்தல் காலங்களில் வெறும் ஏமாற்று கோஷங்களையே மலையக மக்களுக்காக எழுப்பினர்.

விவசாயிகளுக்கு உர மானியம் கிடைக்காமை, உருளைக்கிழங்கு, மரக்கறி விவசாயிகளுக்கும் உர மானியம் கிடைக்காமை போன்ற பல பாரதூரமான பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மேலோட்டமாகப் பார்ப்பதை விடுத்து யதார்த்தத்தில் நோக்கி காய், கறிகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளின் நாளாந்த ஜீவனோபாயத்தை அவர்களுக்கு தங்கு தடையின்றி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறுபுறம் பொருள்களின் விலைகள் கூட அதிகரித்துள்ளன. இவற்றுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. எனவே அரசு இவர்களினது நலன்கள் குறித்து சிந்தித்து நடந்து கொள்ள வேண்டும்.

குரங்குகள் தேங்காய் சாப்பிட்டன, நாய்க்கு சோறு போடுவதால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றவாறு அரசாங்கம் புலம்பிக்கொண்டும், சிணுங்குவதன் மூலமும் இந்த பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியாது. மக்கள் ஆணையை வழங்கியது சிணுங்குவதற்கும் புலம்புவதற்குமல்ல. பிரச்சினைகளுக்கான தீர்வுகளை வழங்குமாறே ஆணையைப் பெற்றுத் தந்தனர். ஆகவே அரசு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நாட்டில் சட்டம், ஒழுங்கை பேணும் விடயத்தில் அரசு தவறிழைத்து விட்டது. சமூகம் கொலைகாரர்களின் பிடியில் சிக்கியுள்ளது. பாதுகாப்பு பிரதியமைச்சர் தேசிய பாதுகாப்பு குறித்து டியூஷன் கொடுப்பதாகப் பேசினாலும், இன்றளவிலும் இந்தக் கொலைக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க இவர்களால் முடியவில்லை.

தேசிய பாதுகாப்பும் பொது மக்கள் பாதுகாப்பும் இரண்டுமே ஆபத்தில் காணப்படுகின்றன.– என்றார்.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள்!

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் , காரைதீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் 14 பேர் அம்பாறை மாவட்ட செயலகத்தில் மனுத்தாக்கல் செய்தனர்.

வேட்பு மனுவில் பிரதான வேட்பாளர்களாக, முன்னாள் தவிசாளர்களான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், யோகரெத்தினம் கோபிகாந்த், முன்னாள் உறுப்பினர் சுப்பிரமணியம் பாஸ்கரன், ஆலய தர்மகர்த்தா சின்னத்தம்பி சிவகுமார், மயில்வாகனம் யோகேஸ்வரி, செல்லத் தம்பி புவனேந்திரன், கமலநாதன் கேதுஜன் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

மேலதிக வேட்பாளர்களாக சதாசிவம் சசிக்குமார், க.லோகநாதன், த.அமலா, க.நளாயினி, வி.சுதர்ஜினி, வ.சிவகரன், கி.கியோகிருஷ்ணா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் காரைதீவு பிரதேச சபை வேட்பாளர்கள்!

(வி.ரி. சகாதேவராஜா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் காரைதீவு பிரதேச சபைக்கான வேட்பாளர்கள் அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

வேட்புமனுவில் பிரதான வேட்பாளர்களாக பரமலிங்கம் ரவிச்சந்திரன் (சங்கரி), கனகசபை சற்குணராஜா, மயில்வாகனம் ரேணுகா, சுப்பிரமணியம் தர்மராஜா, பாக்கியராஜா சுதன், தர்மதாச கிருஷ்ணராஸ், ஸ்ரீ நவ நாதர்ஜி ஸ்ரீநவநீதன் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர். மேலதிக வேட்பாளர்களாக வைரமுத்து மகேஸ்வரன், திருஞானசம்பந்தன் ஐதுர்ஷிகன், நகுலேஸ்வரன் சசிகலா, வெற்றிவேல் பிரதாபன், பாலகுமார் டிலோமிகா, பாலமுத்து சாந்தராணி, அருளம்பலம் கினோஜன் ஆகியோர் குறிப்பிடப் பட்டுள்ளனர்.

## திருக்கோவில் பிரதேச சபையில் சசிகுமார் தலைமையில் சுயேச்சை

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச சபைக்கு பிரபல சமூக செயற்பாட்டாளரும் கல்முனை ரோட்டரி கழகத்தின் முன்னாள் தலைவருமான தொழிலதிபர் பொறியியலாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சைக் குழு வேட்புமனு தாக்கல் செய்துள்ளது.

திருக்கோவில் பிரதேச சபைக்கு 8 வேட்புமனுக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் (சங்கு) வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

பிரபல சமூக செயற்பாட்டாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சை குழுவுக்கு வண்டில் சின்னம் வழங்கப்பட்டுள்ளது.



அந்தக் குழுவில் சுந்தரலிங்கம் சசிகுமார் (தலைமை வேட்பாளர்), புஸ்பராசா ஹேமகோபிசாந், பாக்கியராசா மோகனதாஸ், கணேஷ் வரதனேஷ், நாகராசா கிருஜன், தயாபரசிங்கம் பரணிதரன், தங்கராசா வரதராஜன், கனகசபை தேவதாசன், பொன்னையா கேதீஸ்வரன், சக்திவேல் சீனுகா, ரவீந்திரன் டிலானி, சிவநாதன் டிலுக்சினி, கோபாலப்பிள்ளை கமல்ராஜன், தம்பிராசா தர்ஷினி, யோகராசா பிரபாகரன், இராசதுரை ஜெயராசா, இராஜகோபால் செல்வராஜா, செல்வநாயகம் ரவிந்திரகுமார், ஆனந்தம் லோயினி ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



# பசுமை திட்டம் 2025 இல் 1,000 மரங்கள்; நடுதல் முயற்சியின் அங்குரார்ப்பண விழா!

(எஸ். நிதர்ஷன்)

சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்தும் மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை வழங்கும் முயற்சியில் யாழ்ப்பாண மருத்துவ சங்கம் மற்றும் இணுவில் மெக்லியாட் மருத்துவ மனை இணைந்து 2025 - பசுமை திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

இந்த முயற்சி சுற்றுச்சூழலின் சமநிலையை மேம்படுத்த மருத்துவ, பல்பயன்பாடுள்ள 1000 நெல்லி மரங்களை நடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நேற்று (26) யாழ் மருத்துவ பீட மாணவர் நலநோன்பு வளாகத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் பல்வேறு தரப்பினரும் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

சிறப்பு விருந்தினர்களில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், மருத்துவ பீடத்தின் பேராசிரியர் ஆர். சுரேந்திரகுமாரன், யாழ்ப்பாண மருத்துவ சங்க உறுப்பினர்கள், மெக்லியாட் மருத்துவமனை நிர்வாகம் மற்றும் ஊழியர்கள், மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த முயற்சியில் அனைத்துத் தரப்பினரையும் ஒருங்கிணைத்து யாழ்ப்பாண மருத்துவ சங்க உறுப்பினரும், மெக்லியாட் மருத்துவ மனையின் பணிப்பாளருமான டாக்டர் பா.சயந்தன் சிறப்பான முறையில் நெறிப்படுத்தியிருந்தார்.

இந்த மரநடுதல் முயற்சி, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் யாழ்ப்பாண மருத்துவ சங்கம் மற்றும் இணுவில் மெக்லியாட் மருத்துவமனையின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவத் துறையினரும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு செயற்பாட்டாளர்களும் இணைந்து இப்பணிகளை முன்னெடுப்பது எதிர்கால சந்ததியினருக்கு ஆரோக்கியமான சூழலை உருவாக்க உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.









# அரசியலில் உட்பிரவேசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்த கலந்தாய்வு

(எஸ்.நிதர்ஷன்)

அரசியலில் உட்பிரவேசிக்கும் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களும் நுண்நிதி கடன்களை பெண்கள் பெற்றுக் கொள்வதால் ஏற்படும் தாக்கங்களும் தொடர்பாக விழுது நிறுவனம் மற்றும் ஜேர்மனிய அபிவிருத்தி கூட்டு தாபனம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்திருந்த வட்டமேசைக் கலந்துரையாடல் விழுது நிறுவனத்தின் நிகழ்ச்சி திட்ட அதிகாரி இந்துமதி ஹரிஹர தாமோதரன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் அமைந்துள்ள திருமண மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

இதன்போது தற்போதைய இளைஞர்கள் மத்தியில் காணப்படுகின்ற போதைப் பொருள் பாவனையால் சமூக மட்டத்திலும் குடும்ப மட்டத்திலும் ஏற்படும் வன்முறை மற்றும் தற்கால சூழலில் பெண்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதார பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண உதவி தேர்தல் ஆணையாளர் சசீலன் இராஜேந்திரா, யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீட பீடாதிபதி ஆர். சுரேந்திரகுமாரன், பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் , சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், போதைப்பொருள் தடுப்பு உத்தியோகத்தர்கள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், அமரா பெண் தலைமைத்துவ குடும்பப் பெண்கள் யாழ் மாவட்ட சமாச அங்கத்தவர்கள் போன்றவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் அரசியலில் பெண்களின் உட்பிரவேசம், நுண்நிதிக் கடன், நிலையான பொருளாதாரம், பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் போன்ற சமூக ரீதியாக அடையாளப்படுத்தப்பட்ட தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்டு குறித்த வட்டமேசைக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

நிகழ்வில் தேர்தல் பிரச்சார காலங்களில் ஏற்படும் வன்முறைகளுக்கான தீர்வுகள் அதனை எவ்வாறான வழிமுறைகளின் மூலம் அணுகலாம், ஜனநாயகம் தொடர்பான அறிமுகப்படுத்தல், வாக்குரிமை பெறுநர் டாப்புக்களின் மீளாய்வு தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படை தகுதிகள் போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் தற்பொழுது அரசியல் உட்பிரவேசித்துள்ள பெண் வேட்பாளர்கள் சமூக மட்டத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தான பரிந்துரைகள் மற்றும் தீர்வுகளும் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள் மூலம் வழங்கப்பட்டிருந்தது.

தற்காலத்தில் இளைஞர்கள் முகங்கொடுத்து வருகின்ற போதைப்பொருள் பாவனை தொடர்பான பிரச்சினைகளுக்கான சமுதாயமட்ட பெண்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக தொடர்புபட்ட போதைப் பொருள் தடுப்பு மற்றும் முற்பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூலம் அதனுடன் தொடர்புபட்ட பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டிருந்தன.

சமுதாயத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் நுண்நிதி கடன் மிக முதன்மையானது. அவ்வாறு நுண்நிதி கடனால் பாதிக்கப்பட்டு வரும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான காரணங்கள் மற்றும் பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.



# சட்டவிரோத பீடி இலைகளை கொண்டு சென்ற இருவர் கைது!

## 1115 கிலோ பீடி இலைகள் மீட்பு!!

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னாரில் இருந்து சட்டவிரோத மாகக் குருநாகல் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளுடன் நேற்று புதன்கிழமை (26) இரவு மன்னார் முருங்கன் பகுதி யில் வைத்து இருவர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

மன்னார் இராணுவ புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவை மீட்கப்பட்டுள்ளன.



இந்தியாவில் இருந்து சட்ட விரோத மாக இறக்குமதி செய்யப்பட்ட ஒரு தொகுதி பீடி இலை மூடைகளை மன்னாரில் இருந்து குருநாகலுக்கு கொண்டு செல்லும் வழியில் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. நேற்று (26) இரவு மன்னார் விசேட அதிரடிப்படை அதி-காரிகளுடன் இணைந்து முருங்கன் பகுதியில் குறித்த வாகனம் சோதனை செய்யப்பட்டுள்ளது.

இதன் போது வாகனத்தில் 36 பீடி இலை மூடைகளில் ஆயிரத்து 115 கிலோ கிராம் கொண்டு செல்லப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது. இதன்போதே குறித்த வாகனத்தில் பயணம் செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசார ணைகளில், கைப்பற்றப்பட்ட பீடி இலை கள் இந்தியாவில் இருந்து கடல் வழியாக மன்னார் பகுதிக்கு சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்டு பின்னர் மன் னாரில் இருந்து குருநாகல் பகுதிக்குக் கொண்டு செல்லப்பட இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 31 மற்றும் 29 வயதுடைய மன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

பறிமுதல் செய்யப்பட்ட பீடி இலைகள் மற்றும் அவர்கள் கொண்டு செல்லப்பட்ட லாரியுடன் சந்தேக நபர்களை மேலதிக விசாரணைக்காக முருங்கன பொலஜஸா ரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முருங் கன் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.





# விபுலானந்தரின் 133 ஆவது ஜனன தினம் அனுஷ்டிப்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

உலகின் முதல் தமிழ் பேராசிரி யர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபு லானந்த அடிகளாரின் 133 ஆவது ஜனன தின நிகழ்வுகள் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் அதிபர் ம.சுந்தரராஜன் தலைமை யில் இன்று (27) வியாழக்கிழமை நடை பெற்றன.







# வடக்கில் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் மீனவர்களுக்கு நிவாரணம் எதுவும் இல்லை!

## மன்னாரில் இடம் பெற்ற கருத்தாய்வு நிகழ்வில் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

**(மன்னார் நிருபர்)**

வடக்கில் மீனவர்கள் பல்வேறு அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற போதும் அவர்களுக்கு நிவாரணங்கள் எதுவும் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை என்று மன்னாரில் இடம் பெற்ற கருத்தாய்வு நிகழ்வில் மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

'மன்னார் மாவட்ட மீனவ சமூகம் எதிர்நோக்கும் சமூக பொருளாதார மற்றும் ஒருங்கிணைந்த உரிமைக்காய் எங்கள் குரல்' எனும் தொனிப்பொருளில் மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் ஏற்பாடு செய்த கருத்து பகிர்வு நிகழ்வு நேற்று (26) மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்னார் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் மன்னார் மாவட்ட சிரேஷ்ட திட்ட அலுவலர் ஜெபநாதன் டலிமா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் இளையோர்களும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர் கொள்ளும் பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

அங்கு தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

குறிப்பாக இலங்கை கடற்பரப்பில் இந்திய இழுவைப் படகுகளின் வருகையை அதிகரித்துள்ள நிலையில் இதனால் இலங்கை மீனவர்கள் பாரிய அளவில் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் இலங்கை மீனவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற இழுவை மடி தொழில் காரணமாகவும் மீனவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மீனவர்களுக்கு வழங்கப்படும் மானியத் திட்டம் உரிய முறையில் மீனவர்களுக்கு வழங்கப்படவில்லை.

பல்வேறு கூட்டங்களில் குறித்த விடயங்கள் தொடர்பாக பேசப்பட்டுள்ள போதும் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வில்லை. மீனவர்களுக்கு கடலில் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. ஆனால் அந்த அனர்த்தங்களுக்கு கூட எவ்வித இழப்பீடுகளும் உரிய முறையில் கிடைப்பதில்லை.

மீனவர்களும் முழுமையாக பாதிக்கப்படுகின்ற காலப் பகுதியில் அவர்களுக்கு உதவித் திட்டங்கள் கூட உரிய முறையில் வழங்கப்படுவதில்லை.

எனவே அவ்வாறான காலப் பகுதியில் மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு திட்டங்களை துரிதப்படுத்த வேண்டும்.

வட கடலில் இந்திய மீனவர்களின் அத்து மீறல்கள் அதிகரித்துள்ள நிலையில் அவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுகின்றனர். எனினும் தென் கடலில் வருகின்ற இந்திய மீனவர்கள் கண்டும் காணாமலும் விடப்படுகின்றனர் என்றும் மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய வருகைக்கு எதிராக வடக்கில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதும் அவர்கள் அத்து மீறிய வருகை அதிகரித்துள்ளது என்று மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.







# கல்முனை, சாய்ந்தமருது விளையாட்டு மைதான அபிவிருத்தி குறித்து ஆராய்வு.!

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**


கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதான அபிவிருத்திக்காக அரசால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் 150 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக இளைஞர் விவகார, விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் றியல் அட்மிரல் ஷெமல் பெர்னாண்டோ சகிதம் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா அங்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அதேவேளை, சாய்ந்தமருது பொலிவேரியன் விளையாட்டு மைதானம் மற்றும் பௌசி விளையாட்டு மைதானம் என்பவற்றின் நிலைமைகளையும் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

கடந்த காலங்களில் அபிவிருத்தி பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் மிகவும் மோசமாக காணப்படுகின்ற இந்த விளையாட்டு மைதானங்களைத் துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து ஆதம்பாவா எம்.பி. இதன்போது விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகத்திடம் வலியுறுத்தினார்.

இந்தக் கள விஜயத்தில் அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எம். றிபாஸ் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.




EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மையம் அங்குரார்ப்பணமும் இப்தார் நிகழ்வுகளும்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி சங்கத்தினால் ஏற்பாடு செய்து நடத்திய வருடாந்த இப்தார் நிகழ்வு சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட கரையோர பகுதிகளுக்கான அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம்பாவா பிரதம அதிதியாகவும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். சபீனா விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தை மையப்படுத்தி, கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மையம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையமானது சுமார் 3 வருட காலமாக கலை இலக்கியத் துறை சார் மாணவர்களுக்கும், கலைஞர்களுக்கும் இப்பிரதேசத்திற்கும் பாரிய சேவையாற்றி வருகின்ற ஒரு முன்மாதிரியான நிறுவனமாக சாய்ந்தமரு பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்றது.

சாய்ந்தமருது பிரதேச கலாசார மத்திய நிலையம் இலக்கியவாதிகள் நவீன தொழில்நுட்பத்தின் தாக்கத்தால் இலக்கிய ஆளுமைகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை அதாவது தற்கால நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக இலக்கியவாதிகள் எதிர்நோக்கும் சவால்களை முறியடிப்பதற்கான ஒரு புரட்சிகரமான, முன்மாதிரியான இலங்கையின் முதன்முறையாக சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையமானது கிழக்கை மையப்படுத்திய, கரைவாகுப்பற்று ஆழ்புலஎல்லையைமையப் படுத்திய, "கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மையம்" ஒன்றை சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதனூடாக இலக்கியத்துறையில் சாதிக்கின்ற, இலக்கியத்துறை சார்ந்த இலக்கியவாதிகளை, இலக்கிய ஆளுமைகளை, எழுத்தாளர்களை, கவிஞர்களை, கதையாசிரியர்களை ஊக்கப்படுத்துகின்ற, கரைவாகுப்பற்று என்று அழைக்கின்ற ஒலுவில் கழியோடைப் பாலத்துக்கும் நீலாவணைப் பாலத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் உள்ள அனைத்து இன, மத இலக்கியத் துறையினருக்குமான ஒரு பிரதான மத்திய நிலையமாக, அதாவது "கரைவாகுப்பற்று இலக்கிய ஆய்வு மத்திய நிலையமாக" இந்த கலாசார மத்திய நிலையத்தில் எதிர்காலத்தில் உருவாக்கி, அதனூடாக கலைஞர்களின், இலக்கியம் தொடர்பான இலக்கியவாதிகளின் ஆய்வு மையத்துக்கு உரிய அனைத்துப் பூர்வாங்கஏற்பாடுகளைச்செய்வதாகவும் இதனூடாக இலக்கியவாதிகளின் ஒன்று கூடல்கள், ஆய்வுக்கலன்கள், அவர்களது கருத்தாடல்கள், புத்தக வெளியீடுகள், இலக்கிய ஆய்வு மாநாடுகள் போன்ற விடயங்களைச் செய்வதற்கான ஒரு முன்னேற்பாட்டைச் செய்திருப்பதாகவும் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்ஸான் தனது தலைமையுரையின் போது சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ரம்ஸான், கல்முனை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தரும் கலாசார மத்திய நிலையத்தின் ஆலோசகருமான ஏ.சீ.எம். பழீல், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். நளீர், பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களான ஏ.எச். சபீகா, ஏ.எம். தௌபீக், பிரதேச செயலக பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ.சீ.முஹம்மத், ஏ.சி. றியாஸ், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஐ. ஜாபிர், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஏ.எச்.ஏ பஷீர், நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் எஸ். இம்தியாஸ் மற்றும் மத்திய நிலைய அபிவிருத்தி சங்கச்செயலாளர் அஸ்வான் மௌலானா, இறக்காமம் கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஏ.பி. நௌசாத், கல்முனை கலாசார மத்திய நிலையப் பொறுப்பதிகாரி ஜெனித்ரா தேவசந்திரன், கலாசார மத்திய நிலைய நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களான ஓய்வுபெற்ற கலாசார உத்தியோகத்தர் எம்.ஐ.எம்.அஸ்ரப், சிரேஷ்ட அண்ணாவியார், எம். ஐ. அலாவுதீன், கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன், எம். மாஹிர், மருதூர் என்.எம். அலிக்கான், கலாபூஷணம் சுபுஹான், மற்றும் மத்திய நிலையத்தின் ஊடக ஒருங்கிணைப்பாளரும் பல்துறைக் கலைஞருமான எம்.எஸ்.எம்.ஸாகிர், கலைஞர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் மத்திய நிலைய வளவாளர்களான எம். ஐ. எம். அமீர், எம்.எம்.எம். தாதீஸ், மத்திய நிலைய மாணவர்கள் கலந்து கொண்டனர்.







# இளம் பனை வடலிகளை பிடுங்கி நடும் பரீட்சார்த்தச் செயற்பாடுகள் வெற்றி!

## பனை அபிவிருத்திச்சபை நடவடிக்கை

(த.சுபேசன்)

அபிவிருத்திப் பணிகளுக்கு இடையூறாக காணப்படும் இளம் பனை வடலிகளை பிடுங்கி பாதுகாப்பாக நடும் செயற்பாடு ஒன்று மன்னார் மாவட்டத்தில் பனை அபிவிருத்திச் சபையினுடைய ஆலோசனைக்கு அமைவாக தனியார் நிறுவனம் ஒன்றால் பரீட்சார்த்தமாக முன்னெடுக்கப்பட்ட நிலையில், அது வெற்றியளித்துள்ளது என்று பனை அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

மன்னாரில் அதாம்ஸ் பார்ம் ரிசோவ்ட் நிறுவனம் சுற்றுலாத் தொழில்துறையை ஆரம்பிக்கவுள்ள நிலையில் அதற்கு இடையூறாக காணப்படும் பனை வடலிகளை பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசனையைப் பெற்று பாதுகாப்பாக பிடுங்கி மாற்று இடத்தில் நடும் முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

இயற்கையை நேசிக்கும் தனியார் நிறுவ னத்தின் மனப்பாங்கு பாராட்டு தற்குரியது.

இந்த பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்திருப்பால் ஏனைய அபிவிருத்திகளின் போதும் பனை வடலிகளை பிடுங்கி பாதுகாப்பான இடத்தில் நட்டு பனை வளத்தைப் பேண முடியும். அண்மையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத் தீர்மானத்துக்கு அமைவாக இந்தப் பரீட்சார்த்த செயற்பாடு பனை அபிவிருத்திச் சபையின் ஆலோசனைக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அபிவிருத்திப் பணிகளின் போது பிடுங்கி அழிக்கப்படும் இளம் பனை வடலிகளை இவ்வாறான செயற்பாடுகள் ஊடாகப் பாதுகாக்க முடியும்.

சிறியதொரு முயற்சி பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.– என்றார்.

# ஞானச்சுடர் 327 ஆவது மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும். வெளியிடப்பட் டுவரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் பங்குனி மாத 327 ஆவது மலர் வெளியீட்டுவிழா நாளை (28) வெள்ளிக்கிழமை காலை 10 .30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி அமுதகலாசுரபி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், இந்த நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் வ.கணேசமூர்த்தியும், மதிப்பீட்டுரையை ஆசிரியர் நி.பாபுதரனும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் உதவித் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.






# வடக்கில் பதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் மகஜர் கையளிப்பு

## வடக்கு மாகாண ஆளுநரிடம் வழங்கியது அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் பதில் அதிபர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில், அகில இலங்கை பதில் அதிபர்கள் சங்கத் தலைவர் அருணாசலம் லெட்சுமணன் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை சந்தித்து தமது கோரிக் கைகள் அடங்கிய மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்த மகஜரில், வட மாகாணத்தி லுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் பதில் அதிபர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளில் கடமை நிமித்தம் கடமை புரியும் பதில் அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அண்மையில் நம் நாட்டின் பிரதமரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரிய மற்றும் பிரதி கல்வி அமைச்சர் மதுர செனவிரத்னவையும் சந்நித்து கலந்துரையாடியுள்ளோம்.

அந்தக் கலந்துரையாடலின் போது பிரதமருக்கு வழங்கிய கடிதத் தின் பிரதியை தங்களுக்கும் அனுப்பி யிருந்தோம்.

அந்தச் சந்திப்பில் வட மாகாணத் தில் உள்ள அதிபர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் உங்களோ டும், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மற்றும் வட மாகாண கல்விப்பணிப்பாளர் ஆகியோருடனும் கலந்துரையாடுமாறும் ஆலோசனை வழங்கினார்.

வட மாகாணத்தில் முக்கியமாக எமது பதில் அதிபர்கள் எதிர் நோக்கும் பின்வரும் இரண்டு பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டியன.

கடந்த காலங்களில் புதிய தர அதிபர்கள் நியமன விடயத்தில் வட மாகாணத்தை தவிர்ந்த ஏனைய மாகாணங்களில், மூன்று வருடங்க ளுக்கு மேற்பட்டு சேவையை வழங்கிய அதிபர்கள் பாடசாலைகளில் இருந்து அகற்றப்படவில்லை.

வட மாகாணத்தில் மாத்திரம் சேவை யில் இருந்த அதிபர்களிடமிருந்து நிர்வாக பொறுப்பை பலவந்தமாக பெற்று புதியவர்களை நியமித்துள்ளார்கள்.

இதனால் பாதிக்கப்பட்ட பதில் அதிபர்கள் மனோ நிலையில் மிகுந்த பாதிப்பை எதிர் நோக்கியுள்ளார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்ட பதில் அதிபர் களுக்கான நிவாரண நடவடிக்கையை தொடர்பில் தாங்கள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

வெற்றிடம் நிலவும் பாடசாலைக ளுக்கு அவர்களை மீளவும் பதிற்கட மையில் நியமிக்குமாறும் வேண்டுகி றோம். மனிதாபிமான ரீதியிலும் உங்கள் தீர்மானம் அமையுமென நம்புகிறோம்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத் துக்கு அமைவாக 2017 மார்ச் மாதம் தொடக்கம் பாடசாலையில் நிர்வா கத்துக்கு பொறுப்பாக இருக்கும் அதிபர் களுக்கு பாடசாலை வகைப்பாட்டை பொருத்து 2500, 4000, 6000 ஆகிய தொகைகள் வழங்கப்படுகின்றன.

அந்தக் கொடுப்பனவு கிழக்கு மாகா ணம், மத்திய மாகாணம் ஆகிய மாகா ணங்களை தவிர ஏனைய மாகாணங் களில் கடமையாற்றும் பதில் அதிபர் களுக்கும் வழங்கப்படுகிறது. இந்த விடயம் தொடர்பாக மத்திய, கிழக்கு மாகாணங்களுக்கும் கோரிக்கையை வைத்துள்ளோம்.

வட மாகாணத்தில் பணி புரியும், பணி புரிந்த பதில் அதிபர்களுக்கும் இந்தக் கொடுப்பனவை சம்பள பட்டியலுடன் இணைக்குமாறும், 2017 மார்ச் மாதம் தொடக்கம் நிலுவையிலுள்ள தொகையையும் இந்தப் பதில் அதிபர்களுக்கு பெற்றுத்தருமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

பதில் அதிபர்களின் உரிமை சார்ந்த கோரிக்கைகளை முன்வைத்து உயர் நீதிமன்றில் வழக்கு விசாரணையில் இருக்கிறது. பிரதமர் மற்றும் ஏனைய மாகாண நிர்வாகங்கள் பதில் அதிபர் களுக்கு பாதிப்பில்லாத தீர்மானத்தை எடுக்கும் உடன்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. - என்று தெரிவித்தனர்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள், பிரத மரும் கல்வி அமைச்சருமான ஹரினி அமரசூரிய , பிரதிக் கல்வி அமைச்சர் மதுர செனவிரட்ண, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், வட மாகாணக் கல்விப் பணிப்பாளர், அகில இலங்கை பதில் அதிபர் சங்க வடக்கு மாகாண இணைப்பாளர் எஸ்.சசிகரன், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகி யோரிடமும் கையளிக்கப்பட்டன.



# மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் அமெரிக்க தூதுவர் ஜூலி சாங்குடன் சந்திப்பு!

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங்கை நேற்று (26) கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியதாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருடன், எமது நீண்டகாலத் தொடர்புகள் மற்றும் நிலைபேறான தன்மை குறித்து ஆக்க பூர்வமான கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது, புனித ரம்ழான் மாதத்தில், காசா மக்கள் எதிர்கொண்டுள்ள பெரும் துயரங்கள் மற்றும் உயிரிழப்புக்கள் தொடர்பிலும் எமது ஆழ்ந்த கவலையை தூதுவரிடம் வெளிப்படுத்தினோம்.

மேலும், மனிதாபிமான விடயங்களை முன்னிறுத்தியும்



உலக அமைதிக்காகவும் அமெரிக்கா தனது ஆதரவினை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

# இந்த ஆண்டு தேசிய வெசாக் விழாவை நுவரெலியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு!

(மஸ்கெலியா)

இலங்கை வாழ் குடிமக்களின் ஆன்மீக பலத்தை வளர்க்கும் வகையில், அனைத்து மக்களுடனும் இணைந்த இந்த ஆண்டு தேசிய வெசாக் விழா நுவரெலியாவில் நடைபெறவுள்ளது என்று பௌத்த ஆய்வுகள் மற்றும் கலாச்சார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தெரிவித்தார்.

தேசிய வெசாக் விழாவை நடத்துவது தொடர்பாக அரச அதிகாரிகள் உள்ளிட்ட பொது மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.





# சட்டத்தை மீறிய உணவகங்களுக்கு எதிராக 70 ஆயிரம் ரூபா தண்டம்!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ் )

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சஹீலா இஸ்ஸடீன் வேண்டுகோளின் பேரில், சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம். நௌஷாத் தலைமையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக எல்லைக்கு உட்பட்ட பகுதியில் காணப்படும் உணவகங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையின் போது, பலசரக்குக் கடைகள், ஹோட்டல்கள், துரித உணவுக் கடைகள், ஐஸ்கிரீம் உற்பத்தி நிலையம் போன்ற சட்டத்தை மீறிய உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனையடுத்து, சம்மாந்துறை நீதிவான் முன்னிலையில் உணவக உரிமையாளர்களை ஆஜர்படுத்திய போது நான்கு உணவக உரிமையாளர்களுக்கும் எதிராக 70 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டது. எச்சரிக்கையையும் செய்யப்பட்டது.

ஹோட்டல், ஐஸ்கிரீம் உற்பத்தி நிலைய உரிமையாளர்களுக்குக் கடுமையான எச்சரிக்கையும் விடுக்கப்பட்டிருந்தது. இரண்டு வாரங்களுக்கு பிறகு மீண்டும் பரிசோதனை செய்யுமாறும் நீதிபதியால் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிரந்தர கிராம உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்குமாறு கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்

(மஸ்கெலியா)

நிரந்தர கிராம உத்தியோகத்தர் ஒருவர் வேண்டும் என கோரிக்கை முன் வைத்து, நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மஸ்கெலியா நோட்டன் பிரதான வீதியில் 320 என்பரவுன்லோ கிராம உத்தியோகத்தர் அலுவலகம் முன்பாக இடம் பெற்றது.

சுமார் 7 பிரிவுகள் கொண்டு உள்ள இந்த கிராம உத்தியோகத்தர் பிரிவில் 7000 மக்கள் உள்ளனர். நாளாந்தம் இந்தப் பிரிவில் உள்ள மக்கள் நிரந்தர கிராம உத்தியோகத்தர் இல்லாத காரணத்தால் பாரிய இன்னல்களுக்கு மத்தியில் உள்ளனர் என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கூறுகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டு வந்தும் பலன் இல்லை என்றும் தற்போது புதிதாக கிராம உத்தியோகத்தர் நியமனம் வழங்கபடுவதால் உடன் கவனம் செலுத்தி இந்த பிரிவுக்கு நிரந்தர கிராம உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனவும் கோரிக்கை முன் வைத்தனர்.



# பெண்களின் சமகால நிலை தொடர்பிலும் அரசியல் தொடர்பிலும் கலந்துரையாடல்

(ஹஸ்பர் ஏ.எச்.)

பெண்கள் மீதான வன்முறைகள் குறித்த சமகால நிலைப்பாடுகள் மற்றும் பெண்களின் நிலைபேறான வாழ்வாதாரம் குறித்த கற்றல் மற்றும் சிபாரிசுகள் தொடர்பான திறந்த வட்டமேசை கலந்துரையாடல் ஒன்று திருகோணமலை உப்புவெளி பட்டினமும் சூழலும் பிரதேச சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வை விழுது நிறுவனம் மற்றும் ஜி.ஐ.இசற். ஆகியன இணைந்து நேற்று (26) ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில்பெண்கள்வாழ்வாதாரரீதியான முன்னேற்றத்தை இணங்கண்டு கொண்டு தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் தொடர்பிலும் பெண்கள் அரசியல் தளத்தில் பிரவேசிக்கக் கூடியவர்களாக தங்களது அறிவு திறன் மனப்பாங்குகளை கொண்டு எதிர்காலத்தில் வலுச்சேர்த்தல் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. வளவாளர்களால் தெளிவூட்டலும் இடம்பெற்றது.

பொருளாதார ரீதியாகப் பெண்களை வலுப்படுத்தவும் அரசியலில் பெண் பிரதிநிதித்துவ முறை உள்வாங்கி அதன் மூலமும் அரசியல் உரிமைகளை தாங்களும் அனுபவிக்கக் கூடிய வழிவகைகளை செய்வது தொடர்பாகவும் மேலும் குறித்த வளவாளர்களால் தெளிவூட்டப்பட்டிருந்தது.

பெண் சுயதொழில் முயற்சியாளர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் உள்ளூர் உற்பத்திகளை சந்தைப்படுத்தி சுயமாக பொருளாதார ரீதியான முன்னேற்றங்களை கண்டு கொள்வது தொடர்பாகவும் பேசப்பட்டது.

நிகழ்வில் வளவாளர்களாக திருமதி நளினி ரத்தினராஜன், சட்டத்தரணி முகுந்தன் உட்பட மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிறு கைத் தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்து கொண்டு பல தெளிவூட்டல்களை துறைசார் தொடர்பில் வழங்கியிருந்தனர்.

இதில் விழுது நிறுவனத்தின் திருகோணமலை மாவட்ட திட்ட இணைப்பாளர் திருமதி இதயராணி சித்திரவேல் உட்பட பெண் சிவில் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# அரச அதிபர் பங்கேற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் தெஹியத்தகண்டிய பிரதேச செயலக அணி சாம்பியன்

(வி.ரி.சகாதேவராஜா)

2025 ஆம் ஆண்டுக்கான அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி உஹன பொலிஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் தெஹியத்தகண்டிய பிரதேச செயலக அணி சாம்பியன் கிண்ணத்தை வென்றது. மாவட்ட செயலக அணி இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

உஹன பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த இந்தப் போட்டியில் மாவட்டச் செயலகம் மற்றும் உஹன, தமன, மஹாஓயா, பதியதலாவ மற்றும் தெஹியத்தகண்டிய ஆகிய பிரதேச செயலகங்களின் அணிகள் பங்கேற்றன.

விளையாட்டில் பங்கேற்ற அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம பேசுகையில்,

எதிர்காலத்தில் இதுபோன்ற போட்டிகளை ஏற்பாடு செய்வதில் பங்கேற்க மாவட்டத்தின் பிற பிரதேச செயலகங் களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

போட்டியை ஏற்பாடு செய்த உஹன பிரதேச செயலாளர் உட்பட அனைத்து அதிகாரிகளுக்கும், போட்டியில் பங்கேற்ற அனைத்து அணிகளின் வீரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.










# அமெரிக்காவுக்கு இறக்குமதி செய்யப்படும் கார்களுக்கு 25 வீத வரி விதித்தார் ட்ரம்ப்

அமெரிக்காவிற்கு இறக்குமதி செய்யப்படும் கார்கள் மற்றும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களுக்கு 25 சதவீத புதிய வரியை அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்த புதிய வரிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருமெனத் தெரிவிக்கப்படுகிறது.


இந்த நடவடிக்கைகள் கார் துறையின் மிகப்பெரிய வளர்ச்சிக்கு வழிவகுக்கும் எனவும் அமெரிக்காவில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்கும் வகையிலான முதலீடுகளை ஊக்குவிக்கும் எனவும் டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான புதிய நிர்வாகம் அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மாத்திரம் அமெரிக்கா சுமார் 80 லட்சம் கார்களை இறக்குமதி செய்துள்ளது.

இதனூடாக 240 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக அமெரிக்காவுக்கு அதிக கார்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மெக்சிகோ உள்ளதுடன், அதற்கு அடுத்தபடியாக தென்கொரியா, ஜப்பான், கனடா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளும் கார்களை ஏற்றுமதி செய்கின்றன.

இந்தநிலையில் அமெரிக்காவின் புதிய நடவடிக்கை உலகளாவிய வர்த்தகப் போருக்கு வழிவகுக்கும் என பொருளியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



# தென் கொரியாவில் பரவும் காட்டுத்தீயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

தென் கொரியாவின் தென் கிழக்கு பகுதியில் பரவிவரும் காட்டுத்தீயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 24 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்த அனைவரும் 60 மற்றும் 70 வயதிற்கு இடைப்பட்டவர்கள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், குறித்த தீப்பரவலில் சிக்குண்டு மேலும் 26 பேர் காயமடைந்துள்ளனர்

அவர்களில் 12 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கிழக்கு பகுதியிலிருந்து இதுவரை 23,000 க்கும் அதிகமானோர் தங்களது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.



சுமார் 5000 இராணுவத்தினர் தீயணைப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன், அமெரிக்க இராணுவத்தின் உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஏப்ரல் 6 இல் பாம்பன் பாலத்தை திறந்துவைக்கின்றார் பிரதமர் மோடி

பாம்பன் புதிய ரயில் பாலத்தை ஏப்ரல் 6 ஆம் திகதி ராமநவமியன்று திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. இராமேஸ்வரத்தில் நடக்கும் திறப்பு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்க வாய்ப்பு உள்ளது என தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் தெரிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் ரயில் தூக்குப் பாலத்தில் அடிக்கடி ஏற்பட்ட தொழில்நுட்பப் பிரச்சினைகள் மற்றும் விரிசல் காரணமாக, பாலத்தின் அருகிலேயே புதிய ரயில் பாலம் 2019 மார்ச் 1 இல் பிரதமர் மோடி காணொலி வாயிலாக அடிக்கல் நாட்டினார். 535 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்ட புதிய பாலத்தின் பணிகளை கடந்த நவம்பர் மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி ஆய்வுசெய்து, சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டினார். தொடர்ந்து, அவர் சுட்டிக்காட்டிய பணிகள் சரி செய்யப்பட்டன.

பாம்பன் புதிய ரயில் பாலத்தை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைப்பதற்கான பணிகளை தெற்கு ரயில்வே தீவிரப்படுத்தி உள்ள நிலையில், இராமேஸ்வரம் ரயில் நிலைய மேம்பாட்டுப் பணிகள், பாம்பன் புதிய ரயில் பாலத்தை தெற்கு ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் நேற்று ஆய்வு செய்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"ஏப்ரல்.6 ஆம் திகதி ராமநவமியன்று பாம்பன் புதிய ரயில் பாலத்தைத் திறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. திறப்பு விழாவில் பிரதமர் நரேந்திர மோடி நேரில் கலந்துகொள்ள வாய்ப்புள்ளது. மேலும், அன்று இராமேஸ்வரத்திலிருந்து புதிய ரயில் சேவையைத் தொடங்கவும் வாய்ப்புகள் உள்ளன. விழாவில் கலந்துகொள்ள பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். இதற்காக இராமேஸ்வரம் பஸ் நிலையம் அருகே விழாவுக்கான மேடை அமைக்கப்படும்.



இராமேஸ்வரம் ரயில் நிலைய மேம்பாட்டுப் பணிகள் செப்டம்பர் மாதத்துக்குள் முழுமையாக நிறைவடைந்து விடும். மேலும், பாம்பன் பழைய ரயில் பாலத்தை அகற்றுவது குறித்து விரைவில் முடிவு எடுக்கப்படும். இராமேஸ்வரம்- தனுஷ்கோடி இடையே புதிய ரயில் பாதை அமைப்பதில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினை இருப்பதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த புதிய ரயில் பாதைக்கான நிலங்களைக் கையப்படுத்த வேண்டும். இதனால், தனுஷ்கோடிக்கு புதிய ரயில் பாதை அமைக்கும் பணிகள் தாமதமாகும்." என்றார்.



# கூட்டணி குறித்து பா.ஜ.க. தலைமையிடம்தான் பேசுவோம்: அமித்ஷாடம் அ.தி.மு.க. தலைவர்கள் நேரில் வலியுறுத்தல்

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடைபெறுகிறது. இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க. தலைவர்கள் டில்லியில் நேற்று முன் தினம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா ஆகியோரை சந்தித்து பேசினர்.

அமித் ஷாவுடனான சந்திப்பில் முன்னாள் முதல்வர் பழனிச்சாமி, மாநிலங்களவை எம்.பிக்கள் எம். தம்பிதுரை, சி.வி. சண்முகம், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, கே.பி.முனுசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

முன்னதாக பா.ஜ.க. தலைவர் நட்டாவை தம்பிதுரை மட்டும் சந்தித்தார். இந்த சந்திப்புகளின் போது தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அ.தி.மு.க - பா.ஜ.க. மீண்டும் கூட்டணி வைப்பது குறித்து ஆலோசனை நடத்தியதாக கட்சி வட்டாரங்கள் கூறின. இது குறித்து பா.ஜ.க. தலைவர்கள் கூறும் போது,

"ஓ.பி.எஸ், சசிகலா உள்ளிட்ட அதிருப்தி தலைவர்களையும் உடன் சேர்க்க அ.தி.மு.கவிடம் அறிவுறுத்தப்பட்டது. அவர்களுக்கு விருப்பம் இல்லாத இந்த சேர்க்கை குறித்து யோசிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். அண்ணா விவகாரத்தில் அண்ணாமலை - அ.தி.மு.க. தலைவர்கள் இடையே ஏற்பட்ட மோதலால் எடப்பாடி பழனிச்சாமி அவரை தவிர்க்கிறார்.

இதனால், பா.ஜ.க. தேசிய தலைவர்களுடன் கூட்டணி பேச்சுவார்த்தையை நேரடியாக பேச அவர் விரும்புகிறார். சின்னம் மற்றும் தலைவர்கள் மீதான வழக்குகளை தேர்தலுக்கு முன்பாக நிரந்தரமாக முடிக்கவும் அதிமுகவினர் விரும்புகின்றனர். கூட்டணிக்கு முன்பாக மீண்டும் தம்பிதுரைக்கு துணை சபாநாயகர் பதவி பெறவும் விருப்பம் காட்டினர். தமிழ்நாட்டில் பாஜகவுக்கு ஆதரவு பெருகி வருகிறது. எனவே, இந்த முறை அதிமுகவுடன் கூட்டணி வைப்பதால் திமுக ஆட்சிக்கு முடிவு கட்டப்படும்" என்று தெரிவித்தனர்.

எனினும் இந்த சந்திப்புகள் குறித்து 2 கட்சிகள் சார்பிலும் அதிகாரப்பூர்வமான தகவல்கள் இல்லை. ஆனால், இந்த சந்திப்புக்கு முன்னதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, நாடாளுமன்றத்தில் பேசிய காட்சிப் பதிவை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டிருந்தார். அதில், "தம்பி துரைஜிக்கு நான் உறுதி அளிக்கிறேன். 2026 இல் தமிழ்நாட்டில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமையும். மது, ஊழல் என இரண்டுக்கும் முடிவு கட்டப்படும்" என்று அமித் ஷா பேசியுள்ளார்.

டில்லி சந்திப்புக்கு முன்னதாக பா.ஜ.க. - அ.தி.மு.க. தலைவர்கள் சிலர் தமிழகத்தில் கூட்டணி அமைப்பது குறித்து பேசியுள்ளனர். இனி வெளிப்படையாக மேலும் சில சந்திப்புகளை நடத்திய பின் அதிகாரப்பூர்வமாக கூட்டணி குறித்த அறிவிப்பு வெளியாகும் என்று தெரிகிறது.

கனடா முரசு
வியாழக்கிழமை 27/03/2025

## கனடாவில் இந்திய வம்சாவளி பெண் மீது கொடூர தாக்குதல்

கனடாவின் கால்கரியில் பரபரப்பான ரயில் நிலையம் ஒன்றில் பெண் ஒருவர் கொடூரமாக தாக்கப்படும் காணொளி ஒன்று வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

02




# நாம்தான் நம்மை பாதுகாக்கவேண்டும்; கனேடிய பிரதமர் மார்க் கார்னி கருத்து

**அமெரிக்க இராணுவ ரகசியம் ஒன்று, சமீபத்தில் தவறுதலாக ஊடகவியலாளர் ஒருவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட விடயம் உலகைக் கலக்கிக்கொண்டிருக்கிறது.**

**அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற நாள்முதல், ட்ரம்ப் மற்ற நாடுகளை கதிகலங்கவைத்துக்கொண்டிருந்த நிலையில், தற்போது அமெரிக்க இராணுவ ரகசியம் ஒன்று வெளியே கசிய, ட்ரம்ப் கேலிக்குள்ளாகியிருக்கிறார்.**

கனடாவை தொடர்ந்து ட்ரம்ப் வம்புக்கிழுத்துவந்த நிலையில், கசிந்த இராணுவ ரகசியங்களால் தர்மசங்கடமான நிலைக்கு ட்ரம்ப் தள்ளப்பட, இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு கனடா பிரதமரான மார்க் கார்னியும், நம்மை நாம்தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார்.

இது மிகவும் சீரியஸான விடயம் என்று கூறியுள்ள கார்னி, இதுபோன்ற விடயங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

அமெரிக்காவுடன் கனடாவுக்கு வலுவான உளவுத்துறை மற்றும் பாதுகாப்பு தொடர்பிலான உறவு உள்ளது என்று கூறியுள்ள கார்னி, ஆனால், இரு நாடுகளுக்குமிடையி லான உறவுகள் தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கின்றன என்றும் கூறியுள்ளார்.

# கனடாவில் இடம்பெற்ற கொலை: இரண்டு தமிழ் இளைஞர்கள் கைது

கனடாவின் பிக்ரிங் பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் இரண்டு தமிழர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த மாதம் ஆரம்பத்தில் மார்கம் நகரைச் சேர்ந்த கோகிலன் பாலமுரளி மற்றும் டொரண்டோவைச் சேர்ந்த பிரன்னன் பாலசேகர் (வயது 24) ஆகியோர், கடந்த 7 மற்றும் 8 ஆம் திகதிக்கிடையே ஒரு சதி திட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

முதலில், அவர்கள் இருவரும் மார்ச் 8 ஆம் திகதி ஒரு கொலை சதியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டனர்.

03





# ட்ரம்பின் வாகன வரிகள் நாட்டின் மீதான நேரடி தாக்குதல்; கனடா பிரதமர் கார்னி

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வாகன வரிகள் அவரது நாட்டின் மீதான நேரடி தாக்குதல் என்றும் வர்த்தகப் போர் அமெரிக்கர்களைப் பாதிக்கிறது எனவும் கனடா பிரதமர் மார்க் கார்னி கூறினார்.

அமெரிக்க நுகர்வோர் நம்பிக்கை பல ஆண்டுகளில் இல்லாத அளவுக்குக் குறைந்துள்ளது என்றும் குறிப்பிட்டார். அடுத்த மாதம் முதல் ஆட்டோ இறக்குமதிகள் மீது 25 வீத வரிகளை விதிப்பதாகக் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இந்நிலையில் இது மிகவும் நேரடியான தாக்குதல் என தெரிவித்துள்ள கனடா பிரதமர் மார்க் கார்னி, நாங்கள் எங்கள் தொழிலாளர்களைப் பாதுகாப்போம். எங்கள் நிறுவனங்களைப் பாதுகாப்போம். எங்கள் நாட்டைப் பாதுகாப்போம் பழிவாங்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன் டிரம்பின் நிர்வாக உத்தரவின் விவரங்களைப் பார்க்க வேண்டும் என்றும் கார்னி கூறினார்.

இது நியாயமற்றது என குறிப்பிட்ட அவர், தேர்தல் பிரச்சாரத்தை விட்டு வெளியேறி அமெரிக்க உறவுகள் குறித்த தனது சிறப்பு அமைச்சரவைக் குழுவிற்குத் தலைமை தாங்க ஒட்டாவா செல்வதாகவும் கூறினார்.




## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சம்பவத்தில் பொதுமக்கள் எவரும் பாதிக்கப்பட்டவருக்கு உதவ முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் என்றே உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது தொடர்புடைய காணொளியானது பொதுமக்களின் கவனத்தை ஈர்த்து வருவதுடன் பரவலான சீற்றத்தையும் இனவெறி குற்றச்சாட்டுகளையும் எழுப்பியுள்ளது.

பிரெய்டன் ஜோசப் ஜேம்ஸ் பிரெஞ்ச் என அடையாளம் காணப்பட்ட அந்த நபர், அந்தப் பெண்ணின் ஜாக்கெட்டைப் பிடித்து, மீண்டும் மீண்டும் குலுக்குவது அந்த காணொலியில் பதிவாகியுள்ளது.

பின்னர் அந்த நபர் பாதிக்கப்பட்ட பெண்ணின் தண்ணீர் போத்தலை எடுத்து, அவர் முகத்தில் தண்ணீரை தெளித்துள்ளான். அத்துடன் சுவற்றில் மோத வைத்துள்ளான். பின்னர் அங்கிருந்து மாயமானதாக கூறப்படுகிறது.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட அந்த பெண் பொலிசாருக்கு தகவல் அளித்துள்ளார். பலர் இச்சம்பவத்தை நேரில் பார்த்தும், எவரும் உதவிக்கு முன்வரவில்லை. ஞாயிறன்று உள்ளூர் நேரப்படி 1.40 மணியளவில் இச்சம்பவம் நடந்துள்ளது என்றே கால்கரி பொலிஸார் உறுதி செய்துள்ளனர்.

அத்துடன், சுமார் 30 நிமிடங்களில் தாக்குதலில் ஈடுபட்ட நபரையும் கைது செய்துள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வழிப்பறிக்கு முயன்றார் என்று மட்டுமே தற்போது அந்த நபர் மீது வழக்கு பதிந்துள்ளதாகவும், இன ரீதியான தாக்குதல் நடந்துள்ளதா என்பது தொடர்பில் உரிய அமைப்பு விசாரித்து வருவதாகவும் கால்கரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




# கனடாவில் விற்கப்படும் பாலியல் ஊக்க மருந்துகள் குறித்து எச்சரிக்கை

கனடா முழுவதும் விற்கப்படும் பல அங்கீகரிக்கப்படாத பாலியல் மேம்பாட்டு பொருள்கள் தீவிரமான ஆரோக்கிய பிரச்சனைகளை ஏற்படுத் தக்கூடும் என கனடா சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியா, அல்பெர்டா, ஒன்டாரியோ, குய்பெக், மனிட்டோபா, நியூ பிரன்சுவிக் ஆகிய மாகாணங்களில் உள்ள கடைகளில் இப் பொருட்கள் விற்கப்பட்டுள்ளதாக கடந்த புதன்கிழமை வெளியான அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கனடிய சுகாதார நிறுவனம் ஏற்கனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கடந்த பெப்ரவரி 19 ஆம் திகதி, பல கடைகளில் இருந்து அங்கீகரிக்கப்படாத பல்வேறு பொருள்களை பறிமுதல் செய்துள்ளது.

ஜூன் 13, 2024 முதல் இதுவரை 432 அங்கீகரிக்கப்படாத பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளக. இதில் "Stiff Rox Honey," "Rhino 69 Platinum," "Spanish Fly" போன்ற பொருள்களும் அடங்கும்.

"அங்கீகரிக்கப்படாத மருத்துவ பொருள்களுக்கு கனடா சுகாதாரத்துறையின் அனுமதி இல்லை, அதனால் அவை பாதுகாப்பு, பயன்திறன், தரம் ஆகியவற்களைப் பரிசீலிக்கப்படவில்லை," என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பொருள்களில் அளவுக்கு மீறிய அல்லது விரும்பத்தகாத மருந்து சேர்மங்கள் இருக்கலாம். சில பொருள்கள், அலர்ஜியை ஏற்படுத்தக்கூடியவை அல்லது சரியான மருத்துவக் கண்காணிப்பு இல்லாமல் உட்கொள்வதால் தீவிர விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவையாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில பொருள்கள் பாக்டீரியா தொற்று, ஆண் அல்லது பெண் ஹார்மோன் அதிகரிப்பு, செரிமான பிரச்சினை போன்றவற்றிற்குப் பயன்படும் என்றாலும், வழக்கமான மருந்துகளுக்கான பாதுகாப்பு சோதனை செய்யப்படாததால் சுகாதார ஆபத்து அதிகம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பொருள்களை பயன்படுத்தியோர் உடனே சுகாதார நிபுணர்களை அணுக வேண்டும் என கனடா சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

"அங்கீகரிக்கப்படாத மருத்துவப் பொருள்களை விற்பது கனடாவில் சட்டவிரோதம்," என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடா எல்லையில் இருந்து இந்த பொருள்கள் நாட்டிற்குள் வருவதைத் தடுக்க, கனடா எல்லை பாதுகாப்பு நிறுவனம் உடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நுகர்வோர் ஏதேனும் உடல்நலக் கோளாறு ஏற்பட்டால், உடனடியாக கனடா சுகாதாரத்துறைக்கு முறைப்பாடு செய்ய முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது, டொரண்டோ பொலிஸார், பிக்ரிங் நகரில் ஏன் விசாரணை நடத்தினார்கள் என்பதைக் குறித்துப் பொதுமக்களுக்கு விளக்கம் அளிக்கவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்தில் முன்னிலையாகியபோது, அவர்கள்மீது மேலும் மூன்று கொலை சதி குற்றச்சாட்டுகள் மற்றும் இரண்டு சொத்துத் திருட்டு குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன.

செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட நீதிமன்ற ஆவணங்கள், இந்த வழக்கு ஸ்கார்பரோவில் உள்ள ஒரு பேக்கரி மற்றும் பிக்ரிங்கில் உள்ள இரண்டு உணவகங்களோடு தொடர்புடையது என குறிப்பிடுகின்றன.

கோகிலன் பாலமுரளி மற்றும் பிரன்னன் பாலசேகர் இருவரும் ஏப்ரல் 11 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகவுள்ளனர்.

